# D E P O S I T I O N   O F   W I T N E S S
## ( Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT
## CHENGALPATTU
## SC No. 102/2024

Ranking of Witness : **PW. 3**

Name :திரு.அன்பழகன்

Husband's/Father's Name : திருு.மாரி (எ) மாரிமுத்து

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2025.

**முதல் விசாரணை**

நான் முகையூர் கிராமத்தில் வசிக்கிறேன். நான் மதுராந்தகம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரிகிறேன். அ.சா.1 சரண்சிங், பட்டியல் சாட்சி 2,4 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 24.9.2014 ம் தேதி மாலை சுமார் 6.40 மணியளவில் என்னுடைய நண்பர் அ.சா.1 சரண்சிங் ஐ பார்க்க வாயலூர் கிராத்தில் இருந்த அவருடைய வீட்டிற்கு சென்றிருந்தேன். அந்த சமயத்தில் நானும் அவரும் சரண்சிங் வீட்டின் எதிரில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அந்த சமயத்தில் அ.சா.1 சரண்சிங் என்பவரில் வைக்கோல்போரில் ஒரு மாடு ஒன்று வைக்கோலை மேய்ந்துகொண்டிருந்தது. அதைப்பார்த்த சரண்சிங் என்பவரின் அப்பா வெள்ளியான் மேற்படி மாட்டை ஓட்டிவிட்டார். அந்த சமயத்தில் அங்கிருந்த ஆஜர் எதிரி வசீகரன் என்பவா் வெள்ளியானைப் பார்த்து ஓத்தா தேவடியா பையா ஏன்டா என் மாட்டைஅடித்தாய் என்று பேசிக்கொண்டே ஓடிவந்து வெள்ளியான கண்ணத்தில்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-4.pdf

www.ecourtsindia.com

அடித்தார். மேற்படி ஓத்தா தேவடியா பையா வார்த்தையை பொது இடத்தில் பேசியதால் எனக்கு மனவருத்தம் ஏற்ப்பட்டது. அந்த சமயத்தில் என்னுடன் இருந்த என்நண்பர் சரண்சிங்யை அவருடைய அப்பாவை எந்த பிரச்சனையும்வேண்டாம் என்று சொல்லி கொண்டு சரண்சிங், வெள்ளியானை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார். இதை பார்த்துக்கொண்டிருந்த ஆஜர் எதிரி ஏழுமலை அவருடைய மகன் வசீகரன், வசீகரனின் மனைவி பானு, ஏழுமலையின் மனைவி மாலா ஆகிய நான்குபேரும் சரண்சிங் வீட்டிற்கு அத்துமீறி நுழைந்தார்கள். பின்பு வசீகரன் என்பவர் சரண்சிங்கின் கழுத்தில் துன்டைப் போட்டு இருக்கி அவரை வெளியே இழுத்துவந்தார். அந்த சமயத்தில் எதிரி ஏழுமலை கையில் ஒருபைப்பை வைத்திருந்தார். வசீகரன் என்பவா் மேற்படி ஏழுமலை வைத்திருந்த பைப்பை பிடுங்கி சரண்சிங்கின் தலையை நோக்கி இதோடு ஒழிந்துபோடா என்று சொல்லி தலையில் ஓங்கி அடித்தார். அந்த சமயத்தில் சரண்சிங் தலையை சாய்த்துகொண்டதால் அந்த அடி சரண்சிங் கின் இடது கண்ணில் பட்டது. அதனால் சரண்சிங்கின்இடது கண்ணில் பெரிய வீக்கம் ஏற்ப்பட்டு கண மூடிவிட்டது. பின்பு ஏழுமலை வசீகரனிடமிருந்த இரும்பு பைப்பை வாங்கி இதோடு ஒழிந்துபோடா என்றுசொல்லி தலையை அடிக்க முற்பட்டார். உடனே அவர் குனிந்து கொண்டதால் அந்த அடி முதுகில் பட்டது. அதனால் முதுகில் அவருக்கு அடிப்பட்டது. அவர் பக்கத்தில் இருந்த வசீகரனின் மனைவி பானு கையில் வைத்திருந்த செங்கல்லால் இதோடு ஒழிந்துபோடா என்று சொல்லி சரண்சிங் என்பவரின் மார்பில் அடித்தார். அதனால் சரண்சிங் என்பவருக்கு வீக்கம் ஏற்ப்பட்டது. பின்பு ஏழுமலையின் மனைவி மாலா சரண்சிங்கை விடகூடாது என்றும் அவனை காலி செய்யவேண்டும் என்றும் அவனை விட்டால் நாம் நிம்மதியாக இருக்கமுடியாது என்று கூறிக்கொண்டே அவர் கையில் வைத்திருந்த தடியால் இதோடு ஒழிந்துபோடா என்று சொல்லி ஓங்கி தலையில் அடித்தார். அவர் தலையை சற்று சாய்த்ததால், அந்த அடி சரண்சிங்கின்வலது காலில் பட்டது. அதனால் சரண்சிங் கின் காலில் காயம் ஏற்ப்பட்டது. பின்பு பக்கத்தில் இருந்த நானும் மற்ற நபர்களும் சத்தம்போட்டோம். அப்போது ஆஜர் எதிரிகள் நான்கு பேரையும்,அ.சா.1 சரண்சிங்கையும் வெள்ளியானையும் பார்த்து எங்களிடம் வைத்து கொண்டால் உங்கள்குடும்பத்தையே காலி செய்துவிடுவேன் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்கள். அதன்பின்பு காயம்பட்ட சரண்சிங்கை நானும் அவருடைய சகோதரன் செல்வதுரை மற்றும் கோபி ஆகியோா் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம்.. சர்ராஸ் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-4.pdf

**குறுக்கு விசாரணை- இல்லைஎதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை, குறுக்கு விசாரணை- இல்லை**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சி படித்துப் பார்த்து சரி என்று ஒப்புக்கொண்டு 09.04.2025 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்,

**Witness Sd/-XXXX** **Sd/-Tmt.T.JayashreeM.L.,**

**தலைமை குற்றவியல் நடுவர்.**

**செங்கல்பட்டு.**

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-4.pdf

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT CHENGALPATTU**
**SC No. 102/2024**

| | |
|---|---|
| Ranking of Witness | : **PW. 4** |
| Name | :திரு.செல்வதுரை |
| Husband's/Father's Name | : திரு்.வெள்ளியான் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.04.2025.

**முதல் விசாரணை**

நான் வாயலூாரில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். வழக்கின்எதிரி வசீகரனைத் தெரியும். 25.9.2014 ம் தேதி மாலை 6.30 மணிக்கு வாயலூர் பேருந்து நிறுத்தத்தில் நானும் பன்னீர் செல்வம் என்பவரும் நின்று கொண்டிருந்தோம் அப்போது சட்ராஸ் காவல்நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் போலிஸ் பார்ட்டி இரண்டு பேர் ஆக மொத்தம் 3 பேர் மேற்படி பேருந்து நிறுத்தத்தில் இருந்த ஆஜர் எதிரிகளில் வசீகரன் மற்றும் ஏழுமலை ஆகிய இருவரையும் மேற்படி இடத்தில் கைது செய்தார்கள். அவர்களில் வசீகரன் என்பவர் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக நானும் பன்னீர்செல்வமும் இருந்தோம். மேற்படி வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் கொடுத்தபோது, அந்த வாக்குமூலத்தில் கடந்த 24.9.2014 ம்தேதி மாலை சுமார் 6.40 மணியளவில் வாயலூர் கிராமத்தில் இருந்த அவர் பக்கத்து வீட்டைச் சேர்ந்த வெள்ளியான் என்பவரின் வைக்கோல்போரில் வசீகரனின் மாடு வைக்கோலைமேய்ந்ததாகவும், அந்த சமயத்தில் அங்கிருந்த வெள்ளியான் மேற்படி வசீகரனின் மாட்டை ஓட்டியதாகவும் உடனே அங்கிருந்த வசீகரன் ஏன் என் மாட்டை ஓட்டினாய் என்று கூறி வெள்ளியான் கண்ணத்தில் அறைந்ததாகவும்,

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-4.pdf

பின்பு அப்போது அங்கிருந்த சரண்சிங் வெள்ளியானை அழைத்துக் கொண்டு வெள்ளியானின் வீட்டிற்கு சென்றதாகவும் பின்பு இவ்வழக்கின்எதிரிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து வெள்ளியான் வீட்டிற்கு அத்துமீறி சென்றதாகவும் அப்போது அங்கிருந்த சரண்சிங்கை வசீகரன் வைத்திருந்த துண்டால் சரண்சிங்கின்கழுத்தில் போட்டு முறுக்கி அங்கிருந்து சரண்சிங்கை வெளியே இழுத்து வந்ததாகவும், பின்பு அவர்கள் வைத்திருந்த பைப்பால் சரண்சிங்கை தாக்கியதாகவும், மேலும் அவருடைய அம்மா கட்டையால் சரண்சிங்கை தாக்கியதாகவும், வசீகரன் மனைவி செங்கல்லால் சரண்சிங்கின் மார்பில் தாக்கி காயப்படுத்தியதாகவும், ஏழுமலை வசீகரன் என்பவரிடமிருந்து பைப்பை பிடுங்கி சரண்சிங்கின் தலையில் அடித்ததாகவும், பின்பு அதன்தொடர்ச்சியாக மேற்படி தன்னை கூட்டி கொண்டு போனால் வசீகரன் வீட்டில் பின்புறம் ஒளித்துவைத்திருப்பதாகவும் கூறி சாட்சிகளாகிய எங்களையும்போலிஸ் பார்ட்டியையும் எதிரி வசீகரன் வீட்டிறகு அழைத்துச் சென்றார். பின்பு எதிரி வசீகரன் வீட்டிறகு பின்புறம் மறைத்துவைத்திருந்த இரும்பு பைப்பை எடுத்து ஆஜர் செய்தார். அதை உதவி ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். அந்த ஒப்புதல் வாக்குமூ லத்திலும் கைப்பற்றுதல் மகசரிலும் நானும் பன்னீர்செல்வமும் கையொப்பமிட்டோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசர் அ.தசா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக சட்ராஸ் காவல நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை, குறுக்கு விசாரணை- இல்லை**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சி படித்துப் பார்த்து சரி என்று ஒப்புக்கொண்டு 09.04.2025 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்,

**Witness Sd/-XXXX** **Sd/-Tmt.T.JayashreeM.L.,**

**தலைமை குற்றவியல் நடுவர்.**

**செங்கல்பட்டு.**

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-4.pdf